# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය :011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
General Office
ෆැක්ස්/தொலைநகல்/Fax:011-2868426
Web: www.elections.gov.lk e-mail: info@slelections.gov.lk

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය(10107)
தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய(10107)


මගේ අංකය :
எனது இல. : EC/EDR/PRE/2024-6 4B

ඔබේ අංකය :
உமது இல.:

දිනය :
திகதி : 2024.07.26

சுற்றறிக்கை இல - 05

பதிவுத் தபால்
மிக முக்கியம்

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாகாண சபைகளினதும் பிரதம செயலாளர்கள்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள் / மாகாண சபைகளின் அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,
அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிச்சட்ட சபைகளின் தவிசாளர்கள் / பொது முகாமையாளர்கள்,

சனாதிபதித் தேர்தல் - 2024
அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கும் நியதிச்சட்ட சபைகளுக்கும் சொந்தமான ஆதனங்கள் தேர்தல் காலப்பகுதியினுள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுத்தலும் தேர்தல் நடாத்தப்படவுள்ள மாகாணங்களுக்குரிய அலுவலர்கள், ஊழியர்களின் ஆட்சேர்ப்பு / பதவியுயர்வு/ இடமாற்றம் என்பவற்றை மட்டுப்படுத்தலும்.

சனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு கோரும் அறிவித்தல் 2024.07.26 ஆந் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய தினம் தொடக்கம் வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டு முடிவடையும் வரையிலான காலப்பகுதி "தேர்தல் காலக்கெடு" என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 104 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலக்கெடுவிற்குள் அரசியற் கட்சிகள்/ குழுக்கள்/ வேட்பாளர்கள் ஆகியோரை ஊக்குவிப்பதற்கு காரணமாக அமையக்கூடிய அல்லது ஏனைய கட்சிகள் / குழுக்கள் / வேட்பாளரொருவர் ஆகியோருக்கு பங்கமேற்படுத்தத்தக்க விதத்திலான நடவடிக்கைகளுக்காக அரச ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ள வேண்டுமெனவும், சகல மாவட்டங்களிலும் அரசாங்க அலுவலர்கள் / ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் பதவி உயர்வு வழங்குதல் / இடமாற்றம் செய்தல் போன்ற விடயங்களை மட்டுப்படுத்த வேண்டுமெனவும், அரச ஆதனங்களின் நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்க்குமுகமாக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

02. அரசியலமைப்பிற்கான இருபத்தோராம் திருத்தத்தின் பிரகாரம், "தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற கால எல்லைக்குள் அரசாங்கத்திற்கோ அல்லது ஏதேனும் ஓர் அரச கூட்டுத்தாபனத்திற்கோ உரித்தான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனமொன்று" ஏதேனுமோர் அரசியற் கட்சியையோ அல்லது ஏதேனுமொரு சுயேச்சைக் குழுவையோ தெரிவுசெய்வதை ஊக்குவிக்கக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய பணிகளுக்காக ஏதேனுமோர் அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதை தடைசெய்கின்ற அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு உண்டு. அவ்வுறுப்புரையின் (ஆ) உப பந்தியின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைகளைச் செயற்படுத்துவதற்கு அரசுக்குச் சொந்தமான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாவர்.

03. 2024 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தல்களுக்குரிய அரச ஆதனங்களைத் துஷ்பிரயோகம் செய்தல், முறைப்பாடுகள் / தேர்தல் பிணக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் கருமங்களுக்குரிய அந்தந்த அமைச்சுக்கள், மாகாண சபைகள், திணைக்களங்கள், மாகாண சபை அமைச்சுக்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அத்தகைய நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சுச் செயலாளர் / திணைக்களத் தலைவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அமைச்சரவை அமைச்சுக்களின் மேலதிக செயலாளரொருவரை அல்லது நிருவாக விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள சிரேட்ட உதவிச் செயலாளரொருவரையும் திணைக்களங்களில், திணைக்களத் தலைவர் / மேலதிக தலைவர் அல்லது அந்த மட்டத்திலுள்ள சிரேட்ட அலுவலரொருவரையும், மாகாண சபைகளின் பிரதம செயலாளரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பொருத்தமான பிரதிப் பிரதம செயலாளரொருவரையும் கூட்டுத்தாபனங்கள் / சபைகளின் நிருவாக விடயத்திற்குப் பொறுப்பான மேலதிக பொது முகாமையாளர் மட்டத்திலான சிரேட்ட அலுவலரொருவரையும் 2024.08.04 ஆம் திகதிக்கு முன்னர் பெயர்குறித்து அனுப்பிவைக்குமாறு இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

04. அதற்கமைய, கொழும்பு மாவட்டத்திற்குரிய அரச நிறுவனங்களில் அரச வளங்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற / முறைப்பாடுகள் சம்பந்தமான ஒருங்கிணைப்பு அலுவலரைப் பெயர்குறித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய பூரணப்படுத்தி துரிதமாக தொலைநகல் மூலம் (011- 2868448/2877208) மற்றும் Electionedr@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது அஞ்சல் மூலம் தேர்தல் பிணக்குத் தீர்வு அலகு, தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் ஏனைய மாவட்டங்களிலுள்ள அரச நிறுவனங்களின் அரச வளங்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பில் பெயர் குறிக்கப்படும் இணைப்பு அலுவலர் பற்றிய தகவல்களை குறித்த மாவட்டத்தின் தேர்தல் அலுவலகத்தின் பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

05. (i) தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்திற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள் முதலான அனைத்து வாகனங்களும் ஹெலிகொப்டர்களும் வானூர்திகளும் ஈடுபடுத்தப்படுவதாக கடந்தகாலத் தேர்தல்களின்போதும் இந்த ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்தன. ஆகையால், அரச வாகனங்களுக்குப் பொறுப்பாகவிருக்கின்ற அனைத்து அலுவலர்களும் அவ்வாகனங்களை எந்தவோர் அரசியற் கட்சியினதும் சுயேச்சைக் குழுவினதும் அல்லது வேட்பாளரொருவரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தாத விதத்தில் தேர்தற் காலப்பகுதியினுள் வாகன குழாமைப் பேணுவதன் மீது விசேட கவனம் செலுத்த வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றேன். அரசாங்கத்திற்குச் சொந்தமான அலுவலர்களுக்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்களும் (Assigned vehicles) வாடகைக்கு பெறப்பட்டு கடமை அலுவல்களில் ஈடுபடுத்தப்படுகின்ற வாகனங்களும் இவற்றில் அடங்குமென்பதைக் கருத்திற்கொள்ளல் வேண்டும். இக்காலப்பகுதியினுள் அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் (Assigned vehicles) தவிர்ந்த முக்கியமாக குழாமிற்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கும் ஏனைய வாகனங்களுக்கும் உரிய ஓட்டக் குறிப்புக்களை முறையாகப் பேணி வர வேண்டுமென்பதோடு, இவ்வோட்டக் குறிப்புக்கள் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் நாளாந்தம் பரீட்சிக்கப்பட்டு அவ்வாகனங்கள் தேர்தற் பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுவதில்லையென்பது தொடர்பாக திருப்தியடைதல் வேண்டும். கடமை அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக போலியான குறிப்புக்களை இட்டு அரச வாகனங்கள் அரசியல் ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கடந்தகாலத் தேர்தல்களின்போது அறிக்கையிடப்பட்டுள்ளமையால், அவ்வாறான போலியான விடயங்களுக்காக அரச வாகனங்களை ஈடுபடுத்தாமலிருப்பதன் மீது அவற்றின் நிருவாகப் பொறுப்பு அலுவலர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

(ii) எந்தவொரு வாகனத்தையும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட பிரத்தியேகமான பதிவிலக்கம் இன்றி சேவையிலீடுபடுத்த முடியாதென்பதால் எந்தவோர் அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கு அல்லது அவர்களின் பணியாட்குழு அங்கத்தினர்களுக்கு அல்லது வேறு எவருக்கும் உரிய பதிவிலக்கம் இன்றி அரசாங்கத்தின் அல்லது அரச நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால் அனைத்து திணைக்களங்கள், அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் என்பன திருத்தகங்களுக்குரிய இலக்கங்களில் (போலியான இலக்கங்களில்) சேவையில் ஈடுபடுத்தப்படவில்லையென்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள் / திணைக்களத் தலைவர்கள் சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

06. அரச அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசுக்குச் சொந்தமான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பனவும் அரச வளங்களாகும். ஆதலால், அக்கட்டிடங்களை அரசியல் கூட்டங்கள், கலந்தாய்வுகள் என்பவற்றிற்குப் பயன்படுத்தல் ஆகாது. தேர்தற் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்திற்குரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை பங்களாக்கள் என்பவற்றைக் கட்டணமின்றி வழங்குவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதென்பதையும் கருத்திற்கொள்ளல் வேண்டும். மேலும் உரிய மாகாணங்களில் அமையப்பெற்றுள்ள அரசிற்கு அல்லது அரச நிறுவனங்களுக்குச்

சொந்தமான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை விடுதிகள் போன்றவற்றை எந்தவோர் அரசியல்வாதிக்கு, அலுவலருக்கு, வேறொரு நபருக்கு வாக்கெடுப்புக் காலக்கெடு முழுவதற்குமென குறித்தொதிக்கிக் கொடுப்பதை தவிர்ந்துகொள்ளல் வேண்டும். அதேபோல் அத்தகைய விடுதிகளில் தங்குமிட வசதிகளைப் பெறுகின்ற நபர்களுக்கு அரசியற் கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபட இடமளித்தல் ஆகாது. அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள், அவை அமையப்பெற்றுள்ள காணிகள் என்பவற்றை அரசியற் கட்சிகளினதும் வேட்பாளர்களினதும் தேர்தற் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரியளவிலான புகைப்படங்கள் என்பவற்றைக் காட்சிக்காக வைப்பதற்குப் பயன்படுத்த இடமளித்தல் ஆகாது.

07. (i) தேர்தல் காலக்கெடுவுக்குள் அரச நிதியைச் செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு விதத்திலான நடமாடும் சேவைகள், கண்காட்சிகள், திறப்பு விழாக்கள் போன்ற வைபவங்கள் அரசியல்வாதிகளோடு தொடர்புடைய ஆட்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுவதோடு, அச்சந்தர்ப்பங்களில் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களும் அவர்களினால் வெளிப்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுகின்றது. அத்தகைய வெளிப்படுத்துகையொன்று தேர்தலுக்காகப் போட்டியிட முன்வந்துள்ள வேட்பாளர் ஒருவரின் வேட்பாண்மைக்கு முறையற்ற விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். இத்தகைய வைபவங்களை நிகழ்த்துவதன் மூலம் ஏதேனுமொரு கட்சியை / சுயேச்சைக் குழுவை அல்லது வேட்பாளரை ஊக்குவிப்பதாகவோ அல்லது வேறொரு கட்சிக்கு / குழுவுக்கு அல்லது வேட்பாளருக்குப் பாதிப்பொன்றை ஏற்படுத்துவதாகவோ முறைப்பாடுகள் கிடைக்க முடியுமாதலால், இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்களை நிகழ்த்துவதை தவிர்ந்து கொள்ளல் பொருத்தமென சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பொதுமக்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அத்தியாவசிய நடமாடும் சேவைகளை இத்தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்துவதற்கு, தேர்தலோடு தொடர்புடைய வேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட முன்னர் தீர்மானிக்கப்பட்டிருப்பின், அத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பாக உடனடியாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். ஆயினும் ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினாலோ அல்லது பதிவாளர் நாயகத் திணைக்களத்தினாலோ நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகளுக்கு இம்மட்டுப்பாடுகள் செல்லுபடியாகாது. இத்தகைய நடமாடும் சேவைகளை அலுவலர்களின் பங்களிப்போடு மாத்திரம் நடாத்த நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

(ii) இக்கால எல்லைக்குள் அரச காணிகளைப் பகிர்ந்தளித்தல், அரச காணி உறுதிகளின் அல்லது வீடுகளின் உரிமைக் கைமாற்றல் உறுதிகளின் பகிர்ந்தளிப்புக்கள், விவசாய உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுயதொழில்களுக்கான கருவிகள், மிதி வண்டிகள், சூரிய ஒளி மின் விளக்குகள், வீடுகளை நிர்மாணிப்பதற்கான பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளிப்பதற்கான கருத்திட்டங்கள் மற்றும் வீட்டுக்கடன்களின் விநியோகம் / நட்டஈட்டுத்தொகைகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களும் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படுவதாக அரசாங்க அலுவலர்களினால் அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டு அவற்றிற்கான பட்டியல்களைத் தயாரித்தலும் இக்காலக்கெடுவிற்குள் மேற்கொள்ளக்கூடாது. ஏனெனில் அத்தகைய பணிகளூடாக வாக்காளர்களுக்கு உபசரணை வழங்கும் குற்றங்கள் நிகழ்த்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலும் இத்தகைய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவித்தல் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலுமேயாகும். மேலும் வீட்டுக்கடன் உதவிகளை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல், கட்டிடப் பொருட்களை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படல் வேண்டும். எனினும் ஒத்திவைக்கப்பட முடியாத அவசர கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு ஏற்கனவே நாள் குறிக்கப்பட்டிருப்பின் அல்லது அவசர விசேட தேவைப்பாடொன்று ஏற்பட்டிருப்பின் அது தொடர்பாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது தொடர்பான பொருத்தமான அறிவுறுத்தல்கள் வெளியிடப்படும். அத்தகைய கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன கூட எந்தவோர் அரசியல் கட்சியினதும் / சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர் ஒருவருக்கு விசேட அனுகூலத்தையோ (அல்லது பிரதிகூலத்தையோ) ஏற்படுத்தாத விதத்தில் அமுல்செய்யப்பட வேண்டுமெனவும் அதற்காக அலுவலர்கள் மாத்திரம் கலந்துக்கொள்ளச் செய்யப்பட வேண்டுமெனவும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

08. (i) மேலும் இத்தேர்தலோடு தொடர்புடைய அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்கள் உள்ளிட்ட நிறுவனங்களின் அலுவலர்கள் எவருக்கும் அலுவலக நேரத்தினுள் அல்லது அலுவலக தினங்களில் கடமை லீவு பெற்றுக் கொண்டு ஏதேனும் ஒரு கட்சியை / குழுவை அல்லது வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்காகவோ அல்லது ஏதேனும் ஒரு கட்சி / ஒரு குழு அல்லது வேட்பாளர் ஒருவருக்கு எதிராக செயற்படுவதற்காக அவகாசம் வழங்கப்படக் கூடாதென்பதோடு, அவ்வாறு செயற்படுகின்ற அலுவலர்கள் / ஊழியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(ii) அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்தற்ற பதவிநிலை அலுவலர்கள், கூட்டுத்தாபனங்கள் / நியதிச்சட்ட சபைகளின் பதவிநிலை அலுவலர்கள், கிராம அலுவலர்கள் / வன அலுவலர்கள் போன்ற சமாதான அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளின் அங்கத்தினர்கள் எவருக்கும் தமது அலுவலக நேரத்தில் மாத்திரமின்றி அலுவலக நேரத்திற்குப் புறம்பாக அல்லது விடுமுறை

தினங்களிலும்கூட நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவோர் அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளர் ஊக்குவிக்கப்படும் விதத்தில் அல்லது பாதிப்புக்குட்படும் விதத்திலான செயற்பாடுகளில் கலந்துகொள்வதிலிருந்தும், அவற்றுக்கு உடந்தையாக இருப்பதிலிருந்தும் தவிர்ந்திருத்தல் வேண்டும். அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்தற்ற அனைத்து அலுவலர்களுக்கும் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி கிடையாதென்ற கட்டளையை மிகவும் கடுமையாக அமுல்படுத்துதல் வேண்டும்.

(iii) மேலும் கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள் ஆகியோரும் இத்தேர்தற் காலப்பகுதியினுள் எந்தவோர் அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு அல்லது வேட்பாளரொருவருக்கு ஊக்குவிப்பான அல்லது பாதிப்பான விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்.

(iv) அரசியல் உரிமை வழங்கப்படாத அரசாங்க உத்தியோகத்தரொருவர் தனது தனிப்பட்ட சமூக வலைத்தள கணக்கை அல்லது வேறு ஒரு கணக்கைப் பயன்படுத்தி ஏதேனும் அரசியல் கட்சியை அல்லது வேட்பாளரை ஊக்குவிப்பதற்கோ அல்லது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்தவித பிரச்சாரத்தையோ அல்லது பிரகடனத்தையோ செய்தல் குற்றமாகும். அரசியல் உரிமையுள்ள உத்தியோகத்தராயினும் கடமை நேரத்தில் அரசாங்க வளங்களைப் பயன்படுத்தி அவ்வாறு பிரச்சாரம் செய்வது குற்றமாகும்.

09. (i) வாக்கெடுப்புக் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட எதிர்பார்க்கப்படுகின்ற அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அலுவலர்களினதும் சாதாரண இடமாற்றங்களை வாக்கெடுப்பு நடத்தப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் இறுதித் திகதி வரை இடைநிறுத்தி வைக்க வேண்டுமென்பதோடு, தேர்தற் கடமைக்காக ஈடுபடுத்தப்படாத அரசாங்க அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களை வாக்கெடுப்புக் காலக்கெடுவுக்குள் இடமாற்றம் செய்கின்றபோது அரசியற் காரணங்களின் பேரில் இத்தகைய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டனவென்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாதவாறு சம்பந்தப்பட்ட இடமாற்றங்களை மேற்கொள்ள அனைத்து அதிகாரிகளும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(ii) தேர்தற் காலப்பகுதியின்போது அலுவலர்களை அத்தியாவசிய விடயமொன்றின் பேரில் உதாரணமாக புலமைப்பரிசில், உயர்கல்வி, வைத்திய சிகிச்சை, சமய கடமைகளை நிறைவேற்றுவதற்கான பயணங்கள் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டுப் பயணங்களை மட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படவில்லை. ஆதலால், அவ்வாறான தேவைப்பாடுகளுக்காக அலுவலர்கள் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வதாயின், அது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளும் தேவைப்பாடொன்றில்லை. இருப்பினும், தேர்தல் நடாத்தப்படுகின்ற மாவட்டங்களின் அலுவலர்கள் குழுவாக இக்காலப்பகுதியினுள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதாயின், முன்னனுமதியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும். இருப்பினும், மிகவும் அவசரமான மற்றும் காலம் தாழ்த்த முடியாத காரணங்களினால் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கு அவசியம் ஏற்படுமாயின், அதற்கான அனுமதியளித்தல் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கப்படுகின்றமையினால் அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பிலான கோரிக்கைகளை முன்கூட்டியே சமர்ப்பிப்பது சிறந்ததாகும்.

(iii) சனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்படுவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர்களின் ஆட்சேர்ப்புகள் / பதவியுயர்வுகள் என்பவற்றுக்கான நாடளாவிய வேலைத்திட்டமொன்றை காலந்தாழ்த்தாமல் நடைமுறைப்படுத்த வேண்டுமென அமைச்சுச் செயலாளர் எதிர்பார்க்கின்றபோது மற்றும் தீவு முழுவதற்கும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவாறு அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு ஏற்புடைய முறையான, அரசியற் தலையீடுகள் இன்றி மேற்கொள்ளப்படுகின்ற வேறு ஆட்சேர்ப்புக்கள் / பதவியுயர்வுகள் என்பவற்றுக்கு இச்சுற்றறிக்கை ஏற்புடையதாகாது.

(iv) மேலும் ஏதேனும் விசேட அத்தியாவசிய விடயமொன்று காரணமாக (எனின், ஒழுக்காற்று நடவடிக்கைகள், அலுவலரின் கோரிக்கையின் பேரில் அனுதாபத்தோடு மேற்கொள்ள நேரிடுதல். ஏதேனும் பாடநெறிக்கு அத்தியாவசியமான போதனாசிரியர்களை வழங்குதல் போன்ற விடயங்கள் காரணமாக) வாக்கெடுப்பை நடாத்துவதற்குரிய பிரதேசங்களில் அலுவலர்கள் / ஆசிரியர்கள் / அதிபர்கள் இடமாற்றம் செய்யப்படுவதற்கு நேரிடும்போது அத்தகைய இடமாற்றங்களை, அரசியல்சார் நிகழ்வுகள் காரணமாக மேற்கொள்ளப்படும் இடமாற்றல்கள் அல்லவென உறுதிப்படுத்த முடியுமாயின், அன்றேல் அது சம்பந்தமான முறைப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப்பெறவில்லையெனில், அவ்வாறான இடமாற்றங்கள் தொடர்பில் தேர்தல்கள் செயலகத்தை அறிவுறுத்திய பின்னர் அதற்கான அனுமதியைப் பெற்றுத் தர முடியும்.

(v) துப்புரவு நடவடிக்கைககள் மற்றும் குப்பைகளை அகற்றும் பணி போன்ற அத்தியவசிய செயற்பாடுகளை துண்டிப்பு இன்றி மேற்கொள்வதற்கு அவசர ஆட்சேர்ப்புக்களை செய்யும் போதும்கூட விரிவான தகவல்களை வழங்கி தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். இந்த அனைத்து விடயங்களையும் வெளிப்படைத்தன்மையுடனும் தகவல் அறியும் உரிமையின் கீழ் அனைத்துப் பிரஜைகளுக்கும்

பெற்றுக்கொள்ள முடியும் என்ற படியால் ஊடகங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் மாற்று அரசியல் கட்சிகள் இந்த விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துவதையும் எல்லா சந்தர்ப்பங்களினும் நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

(vi) மேலும் சனாதிபதித் தேர்தலுக்கான வர்த்தமான அறிவித்தல் 2024.07.26 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளதால் அந்த திகதிக்கு முன்னுள்ள திகதிக்கு முற்தேதியிட்டு நியமனக் கடிதங்கள் / பதவி உயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதால் அவ்வாறான செயற்பாடுகளை எந்த வகையிலும் மேற்கொள்ளக்கூடாதென கண்டிப்பாக வலியுறுத்தப்படுகின்றது.

10. அரச ஆதனங்கள் குறிப்பாக அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் தேர்தலோடு தொடர்புடைய கட்சிகள் / குழுக்கள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக ஈடுபடுத்தும் போக்கொன்று காணப்படுவதாக கடந்த தேர்தல்களின் போது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையினால் அவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு எவ்விதத்திலும் இடமளித்தல் ஆகாது. கடந்த கால தேர்தல்களின் போது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு, தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களில் அவசர கடமை அலுவல்கள் அல்லது விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்களைச் சமர்ப்பித்து கட்சிகள் / வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக (அன்றேல் பாதிப்புக்குட்படுத்துவதற்காக) தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேசங்களுக்கப்பால் அரச / அரச நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் அரச / அரச நிறுவனங்கள் வசமுள்ள அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட வாகனங்களைத் தேர்தல் நடாத்தப்படுகின்ற பிரதேச அலுவலகங்களுக்கு இணைப்பு செய்தல் போன்ற முறையற்ற செயல்களை மேற்கொள்வதற்கு எந்தவோர் அலுவலருக்கும் இடமளித்தல் ஆகாதென தயவன்புடன் அறியத் தருகின்றேன். அதேபோன்று தேர்தல் காலப்பகுதியினுள் விசேட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதையும் ஒத்திவைத்தல் வேண்டும்.

11. இத்தேர்தலின் போது வேட்பாளர்களை அல்லது அவர்கள் போட்டியிடும் அரசியல் கட்சிகளை ஊக்குவிக்கின்ற அல்லது தடுக்கின்ற பணிகள் சார்பாக அரச ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் விதத்திலான இத்தடை எவ்வித தடங்கலுக்கும் உட்படாதவாறு கடுமையாக நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மேலும் ஒவ்வோர் அமைச்சின் கீழுள்ள அனைத்துத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சு செயலாளர்களிடம் தயவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அதேபோன்று அவ்வனைத்து நிறுவனங்களினதும் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல் மற்றும் கட்டளைகளுக்கமைய நடந்துகொள்கின்றார்களா என்பதை அமைச்சுக்களின் செயலாளர்களும் திணைக்களத் தலைவர்களும் சந்தேகத்திற்கிடமின்றி தெரிந்து கொள்ளலும் இன்றியமையாததாகும்.

12. தேர்தலோடு தொடர்புடைய அனைத்துச் சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கு, பாதுகாப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவது உரிய சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரச அதிகாரிகளினதும் பணியாக இருத்தல் வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாகவும் தங்களது மேலான கவனம் ஈர்க்கப்படல் இன்றியமையாததென்பதை தயவன்புடன் அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

13. இச்சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் பணியாட்குழுவினர்கள் ஆகியோரை அறிவுறுத்தும் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்படுகின்றதெனவும் மாகாண ஆளுநர்களை அறிவூட்டும் பொறுப்பு ஆளுநரின் செயலாளருக்கு வழங்கப்படுகின்றது. பிரதம செயலாளர் மற்றும் குறித்த மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் ஏற்புடையவாறு ஆளுநர்களை அறிவூட்ட வேண்டிய பொறுப்பு உள்ளது என்பதையும் தயவுசெய்து கருத்திற்கொள்ளவும்.

14. அதேபோல் ஏற்புடைத்தாகுமிடத்து, ஆணைக்குழுக்களின் செயலாளர்கள், அவ்வாணைக்குழுக்களின் தவிசாளர்களையும் உறுப்பினர்களையும் இச்சுற்றறிக்கை தொடர்பாக அறிவுறுத்தவும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

15. அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு மேலதிகமாக, உங்களது அமைச்சின் / திணைக்களத்தின் / நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அன்றேல் கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் அரசுக்குச் சொந்தமான ஆதனங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடுப்பதும் உரிய அலுவலர்களின் பொறுப்பொன்றென்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

16. இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக வழக்கமாக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள், தேர்தல்கள் கண்காணிப்புக் குழுக்கள் என்பன அறிவூட்டப்படவுள்ளதோடு, "தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள், அரசியற் கட்சிகளின் முகவர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகள் என்போரை உள்ளடக்கிய தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய

செயற்பாட்டு நிலையத்தினால்" இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களோடு தொடர்புடைய முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்யப்படுமெனவும் பாதிக்கப்பட்ட தரப்பினரால், தேர்தல் மனுக்களிலும் வேறு நீதிமன்றச் செயன்முறைகளிலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்காத விதத்திலான செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்க அவகாசமுள்ளதெனவும் மேலும் தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

17. தேர்தல் ஆணைக்குழுவின் இந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கு தவறுமிடத்து அது குற்றமாகும். இலங்கை அரசியலமைப்பின் 104 (ஏ) உறுப்புரையின் பிரகாரம் அவ்வாறான குற்றமொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் போது ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணத்தையும் அல்லது மூன்றாண்டு காலப்பகுதிக்கு விஞ்சாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படுவதற்கும் அல்லது அந்த தண்டப்பணம் மற்றும் மறியற்தண்டனை ஆகிய இரண்டு தண்டனைகளுக்கும் உட்படுத்தப்படலாம் என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

18. இக்கடிதத்தோடு இணைக்கப்பட்டுள்ள (EC/EDR/PRE/2024/06-04B) ஆம் இலக்க படிவத்தை பூரணப்படுத்தி அனுப்புவதன் மூலம் இக்கடிதம் கிடைக்கப் பெற்றமை பற்றியும் அதற்கமைய அலுவல்களை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டமை பற்றியும் உறுதிப்படுத்துமாறு தயவுடன் அறியத் தருகின்றேன். மேலும் உங்கள் நிறுவனம் வசமுள்ள வாகனங்கள் தொடர்பாக அலுவல்களை மேற்கொள்கின்ற அலுவலர்கள் பற்றிய விபரங்களையும் அதன் கீழுள்ள பகுதியில் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

19. இந்த அறிவுறுத்தல்கள் / கட்டளைகள், தேர்தல் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :-

1. சனாதிபதியின் செயலாளர் - தயவுடன் தகவலுக்காக.
2. பிரதம அமைச்சரின் செயலாளர்/ அமைச்சரவையின் செயலாளர் - தயவுடன் தகவலுக்காக.
3. கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் - தயவுடன் தகவலுக்காக.
4. பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு - தயவுடன் தகவலுக்காக.
5. அனைத்து அமைச்சுக்களினதும் மேலதிக செயலாளர்கள் - தயவுடன் தகவலுக்காகவும் செயற்படுவதற்காகவும்.
6. முப்படைத் தளபதிகள் / சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் - தயவுடன் தகவலுக்காகவும் உரிய அலுவல்களுக்காகவும்
7. பொலிஸ்மா அதிபர் - தயவுடன் தகவலுக்காகவும் மற்றும் தேர்தல் சட்டங்களை செயல்வலுவாக்கம் செய்யும் அலுவலர்களை அறிவுறுத்துவதற்காகவும்.
8. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் - இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் விதிமுறைகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பற்றி உடனடியாக எனக்கு அறிக்கையிடுவதற்கும் அத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும்.
9. அனைத்து மாவட்ட மேலதிக / பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் - தயவுடன் தகவலுக்காகவும் மற்றும் உங்களது மாவட்டத்தின் அனைத்து அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள், அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாநகர ஆணையாளர்கள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள் ஆகியோருக்கு இக்கடிதத்தின் பிரதியொன்றை அனுப்பி வைப்பதற்கும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்பதற்கும்.
10. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள்

EC/EDR/PRE/2024/04B

சுற்றறிக்கை கிடைத்தமை பற்றி அறிவிப்பதற்கான படிவம்

(இப்படிவத்தை நிறுவனத்தின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பொன்றில் தயாரித்து அனுப்புவதற்கு தயவுசெய்து நடவடிக்கையெடுக்கவும். அமைச்சுக்களில் இச்சான்றிதழை செயலாளரோ அல்லது மேலதிக செயலாளரொருவரோ அன்றேல் சிரேட்ட உதவிச் செயலாளரொருவரோ திணைக்களமொன்றாயின், திணைக்களத் தலைவரோ அல்லது மேலதிக அன்றேல் பிரதித் தலைவரொருவரோ கூட்டுத்தாபனமொன்று அல்லது நியதிச்சட்ட சபையொன்று தொடர்பிலாயின், பொது முகாமையாளரோ / மேலதிக பொது முகாமையாளரோ அல்லது பிரதிப் பொது முகாமையாளரொருவரோ அல்லது அதற்குச் சமமான பதவியொன்றை வகிக்கின்ற ஒருவரோ கையொப்பமிட்டு அனுப்புதல் வேண்டும்.)

இப்படிவத்தை தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். (www.elections.gov.lk)

எனது இல. :-

உமது இல. :- EC/EDR/PRE/2024/6-04B

அலுவலக முகவரி:-
……………………………………………………
……………………………………………………
திகதி:- ……………………………

பணியகத்தின் தலைவர்,
தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ நிலையம்/மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
தேர்தல் ஆணைக்குழு/ ……………………………………………………,
தேர்தல்கள் செயலகம், சரண மாவத்தை,
இராஜகிரிய

**சனாதிபதித் தேர்தல் - 2024**
**அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதல்**

மேற்குறித்த விடயம் தொடர்பாக உங்களால் அனுப்பிவைக்கப்பட்ட 2024.07.26 ஆம் திகதிய, EC/EDR/PRE/2024/-6 4B ஆம் இலக்க கடிதம் கிடைக்கப்பெற்றதெனவும், அதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதவதை தடுப்பதற்கு உரியவாறு நடவடிக்கையெடுப்பதற்கு குறித்துக்கொண்டுள்ளதாகவும், அதிலுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய செயலாற்ற எனக்குக் கீழ் இயங்கும் அனைத்து கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து பதவிநிலை அலுவலர்களுக்கும் அறிவிக்கப்படுமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

02. இவ்வமைச்சு/ திணைக்களம் / கூட்டுத்தாபனம் / அதிகார சபை வசமுள்ள வாகனங்களைப் பயன்படுத்துதல் / விடுவித்தல் தொடர்பாக அலுவல்களை மேற்கொள்கின்ற அலுவலரின் / அலுவலர்களின் விபரங்களை கீழே குறிப்பிடுகின்றேன்.

பெயர் : ……………………………………………………………………………………………
பதவி : ……………………………………………………………………………………………
அலுவலக முகவரி : …………………………………………………………………………………

தொலைபேசி இலக்கம் :

(i) அலுவலகம் : ……………………………………………
(ii) வீடு : ……………………………………………
(iii) கையடக்க : ……………………………………………
(iv) மின்னஞ்சல் : ……………………………………………

……………………………………
(கையொப்பம்)

……………………………………………
(பெயரும் பதவியும்)